பணிச்சுமை அதிகமாக இல்லை என்ற குறை இருப்பதால், அதற்கு 24 மைல் இன்னொரு சப்-ட்ரெஷரி இருப்பது அவ்வளவு அவசியம் இல்லை என்றுதான் அரசு கருதுகிறது.

மதுவிலக்குக்குத் தனித்துறை

*333 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுவிலக்கு ஒத்திவைப்புச் சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க தனி இலாகா அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதுவிலக்கு ஒத்திவைப்பு சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க தலைமைச் செயலகத்தில் புதியதாக ஆயத் தீர்வை-மதுவிலக்கு என்ற ஒரு துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர வேறு துறை அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

திரு. எம். தேவராசன் : மது விலக்கை ஒத்திவைத்தது நல்லது தான் என்றாலும், மதுவுக்குப் பதிலாக இன்னும் வார்னிஷைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். மதுவின் விலை அதிகமாக இருப்பதால் இப்படி வார்னிஷைக் குடிப்பதாகக் கூறுகிறார்களே அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில பேருக்கு அதிகக் காரம் தேவைப்படுவதால் அப்படிப்பட்ட முயற்சிகளில் இறங்கு கிறார்கள் என்கிற தகவல்கள் வந்திருக்கின்றன. அப்படிப்பட்டவர்கள் வீணாக அதுபோன்ற போதைப் பொருட்களுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டு விரைவிலே அழிந்து போவதைத் தடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் அறிவுரை வழங்குவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் இன்றைக்கு அவைக்கு வர இயலாததால் அவருடைய கேள்விகள் தள்ளி வைக்கப்படுகின்றன. அடுத்து, 334 எண்ணுள்ள கேள்வி எடுத்துக் கொள்ளப்படுகிறது.